வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 22.07.2026 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

ஆயுஷ் மருத்துவ வசதிகளை ராணுவ மருத்துவ மனைகளுக்கு நீட்டிப்பது குறித்து, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

ஆழம் குறைந்த கடலோரப் பகுதிகளுக்கு ஏற்ற, இந்தியாவின் 2ஆவது மாஹே ரக ஏவுகணை எதிர்ப்புக் கப்பல், இன்று முறைப்படி, இந்திய கடற்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

இந்திய ராணுவத்தில் அக்னிவீர் பணியிடங்களுக்கான ஆள் சேர்ப்பு முகாம், புதுச்சேரியில், வரும் ஆகஸ்ட் 1 முதல், நடைபெற உள்ளது.

*நாடாளுமன்றம்-1 (16)*

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் உட்பட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் அமளி ஏற்படுத்தியதால், இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மக்களவை 2ஆவது ஒத்தி வைப்புக்குப் பின்னர் பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் கூடிய சமயத்திலும், அமளி நீடித்ததால், அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன. பெண் உறுப்பினர்களுக்கு எதிராக ஆட்சேபகரமான வார்த்தைகளை பயன்படுத்தியதற்காக, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. திரு. கல்யாண் பேனர்ஜியை, கூட்டத் தொடரின் எஞ்சிய பகுதி முழுவதற்கும் இடை நீக்கம் செய்வதற்கான தீர்மானம், முன்னதாக, அமளிக்கு இடையிலேயே அவையில் நிறைவேற்றப் பட்டது. நீட் விவகாரம் குறித்து அவையில் விவாதிக்க அரசு முற்றிலுமாக தயார் என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு அவையில் கூறினார். விவாதங்களை, உரிய விதிமுறைகளின் கீழ், இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, ஆக்கப்பூர்வ முறையில் எதிர்கொள்ளுதல் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். மாநிலங்களவையில் நிலவிய சூழல் குறித்து ஒரு தொகுப்பு…

(வாய்ஸ்)

*நாடாளுமன்றம் -2 (14)*

(வாய்ஸ்)

<u>நாடாளுமன்ற மாநிலங்களவையில், இன்று, 3ஆவது ஒத்தி வைப்பிற்குப் பின்னர், பிற்பகல் 3 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய சமயத்திலும், அமளி நீடித்ததால், அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப் பட்டன. அவையில் விவாதங்களை மேற்கொள்ள காங்கிரஸ் கட்சியினர் தடை ஏற்படுத்துவதாக, அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு முன்னதாக அவையில் குற்றச் சாட்டு வெளியிட்டார். முதலில் விவாதங்களுக்கு ஒப்புக் கொண்ட காங்கிரஸ், தற்போது புதுப்புது நிபந்தனைகளை வலியுறுத்துவதாக அவர் கூறினார். முன்னதாக,</u>

மாநிலங்களவையில் இன்று காலை அமர்வின் போது, சிக்கிம் சுரங்கப் பாதை விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து துயரம் வெளியிடப்பட்டது. நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயிலின் இயக்கம் தொடங்கி இருப்பது குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோருக்கு, அவைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டார்.

*ஜெய்சங்கர் (16)*

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில், குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் பங்கேற்புடன் நடைபெற்ற இக்கூட்டத்தில், இந்தோ – பசுபிக் பிராந்தியத்தை, சுதந்திரமான, திறந்தநிலை பகுதியாக மேம்படுத்தவும், ஆசிய ஒற்றுமை மற்றும் ஆசிய நாடுகளின் கேந்திர முக்கியத்துவத்தை, வலுவாக ஆதரிக்கவும், தீர்மானிக்கப் பட்டது. இந்தோ – பசிபிக் பிராந்தியம் குறித்த ஆசியான் அணுகு முறையை ஆதரிப்பதில் உள்ள பிராந்திய வாய்ப்புகள் மற்றும் சவால்கள் குறித்தும் விவாதிக்கப் பட்டது. இக்கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. மார்க்கோ ரூபியோ-வை, டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகளில், வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி, அபூர்வ கனிமங்கள், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்து, இந்த சந்திப்பின் போது விவாதிக்கப் பட்டது. ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. பென்னி வோங்-கையும், மணிலாவில், டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

*ஏலம் தவிர்ப்பு (5)*

நவீன கட்டிடக் கலை அம்சங்களுக்குப் புகழ்பெற்ற சண்டிகர் நகருடன் தொடர்புடைய பாரம்பரிய மேசை – நாற்காலிகள், ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில், இன்று, ஏலத்திற்கு வருவதாக இருந்த நிலையில், சண்டிகர் நிர்வாகத்தின் வேண்டுகோளின் பேரில், வெளியுறவு அமைச்சக உடனடி தலையீட்டினால், ஏல நடைமுறைகள் கடைசி நேரத்தில் நிறுத்தப் பட்டன.

*ராஜ்நாத் (19)*

இந்திய ராணுவத்தின் IASV திரிவேணி பாய்மரக் கப்பல் மூலம் உலகைச் சுற்றி சமுத்ர பிரதக்சிணா கடல் பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள முப்படைப் பெண் குழுவினரை, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று, மெய்நிகர் முறையில் கொடியசைத்து வரவேற்றார். இந்த அசாதாரண சாதனையால், கோடிக் கணக்கான இந்தியர்கள் பெருமிதம் அடைந்து இருப்பதாக, அவர் தமது உரையில் கூறினார். முப்படை பெண் குழுவினர், இப்பயணத்தின் போது, இந்திய கலாச்சாரம் மற்றும் ஜனநாயக மாண்புகளின் தூதர்களாகவே செயல்பட்டு உள்ளதாகவும், இந்தியாவின் தன்னம்பிக்கை, புதுமையாக்கத் திறன்கள், மற்றும், சுயசார்பு இலக்கின் ஜீவனுள்ள எடுத்துக் காட்டாகவே இப்பயணம் அமைந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். முப்படைகளுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பின் சின்னமாகவும், இப்பயணம் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார். முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் ராஜா சுப்ரமணி, மற்றும், இந்திய ராணுவம், கடற்படை மற்றும், விமானப் படையின் தளபதிகளும் மெய்நிகர் முறையில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். லெப்டினன்ட் கர்னல் அனுஜா வருட்கர் தலைமையிலான இந்த முப்படை மகளிர் குழுவினர், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி மும்பையில் இருந்து புறப்பட்டு, உலகைச் சுற்றி 25 ஆயிரத்து 500 கடல் மைல் தொலைவிற்கு பயணம் மேற்கொண்ட பின்னர், தற்போது, மீண்டும் மும்பை திரும்பி உள்ளனர்.

*ஜம்மு – காஷ்மீர் (7)*

ஜம்மு – காஷ்மீரில், தொடர் மழை மற்றும் நிலச்சரிவு காரணமாக, வைஷ்ணோ தேவி யாத்திரை, இன்று, 4ஆவது நாளாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. யாத்திரைப் பாதையில் ஆங்காங்கே சிக்கியுள்ள பயணிகளை பத்திரமாக தங்க வைக்கவும், அவர்களுக்கு உணவளிக்கவும் அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். வருடாந்திர அமர்நாத் யாத்திரையும், சாதகமற்ற வானிலை காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. ஜம்மு – ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை மண் சரிவு காரணமாக மூடப்பட்டுள்ளது.

*ஆயுஷ் -1 (3)*

ஆயுஷ் மருத்துவ வசதிகளை ராணுவ மருத்துவ மனைகளுக்கும் நீட்டிப்பது குறித்து, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங்-கிற்கு கடிதம் எழுதி உள்ளார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

*ஆயுஷ் -2 (9)*

(வாய்ஸ்)

ஆயுஷ் மருத்துவ வசதிகளை ராணுவ மருத்துவ மனைகளுக்கு நீட்டிக்கத் தேவையான, தொழில்நுட்ப உதவிகள், தொழில் முறை ஆதரவு, மற்றும் அமைப்பு ரீதியிலான ஒத்துழைப்பை பாதுகாப்புத் துறைக்கு வழங்க, ஆயுஷ் துறை அமைச்சகம் தயாராக உள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜாதவ், தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இத்தகைய முன் முயற்சியால், ஆதாரங்களின் அடிப்படையிலான பாரம்பரிய மருத்துவம், படை வீரர்களுக்கு கிடைக்கவும், நாட்டின் பாரம்பரிய மருத்துவத்தை, பொது சுகாதார கட்டமைப்புடன் ஒருங்கிணைக்கும் பணிகளை வலுப்படுத்தவும் ஏதுவாகும் என்று, கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*கடற்படை (11)*

ஆழம் குறைந்த கடலோரப் பகுதிகளில், எதிரிகளின் நீர்மூழ்கி கப்பல்களை தேடித் தாக்கவல்ல, இந்தியாவின் 2ஆவது மாஹே ரக ஏவுகணை எதிர்ப்புக் கலம், இன்று முறைப்படி இந்திய கடற்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது. INS மால்வான் எனப் பெயரிடப் பட்டுள்ள இக்கப்பலை, கர்நாடக மாநிலம் கார்வார் பகுதியில் உள்ள, INS கடம்பா கடற்படை தளத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், கடற்படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் A.P. சிங் கடற்படையில் இணைத்து வைத்தார். கொச்சி கப்பல் கட்டுமான நிறுவனம், 80 சதவிகித உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டு, மொத்தம் 8 மாஹே ரக ஏவுகணை எதிர்ப்புக் கலங்களை கட்டி வருவதும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஒரு பகுதியாக, கேரளத்தை ஒட்டி அமைந்துள்ள மாஹே நகரம், வரலாற்று காலத்தில், மேற்கு கடற்கரையின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகத் திகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

*புதுச்சேரி ஆள் சேர்ப்பு -1 (14)*

இந்திய ராணுவத்தில் அக்னிவீர் பணியிடங்களுக்கு கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற ஆன் லைன் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான ஆள் சேர்ப்பு முகாம், புதுச்சேரியில், வரும் ஆகஸ்ட் 1 முதல், 10ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. ராணுவத்தின் சென்னை ஆள்சேர்ப்பு மண்டல தலைமையகம், சம்பந்தப்பட்ட மாநில நிர்வாகங்களின் உதவியுடன் இம்முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் உட்பட தமிழகத்தின் 11 மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் புதுச்சேரி மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்காக இம்முகாம் நடத்தப்படுகிறது.

மேலும், சிப்பாய் – மருந்தாளுனர், ஹவில்தார் – கல்வி உள்ளிட்ட பிரிவுகளுக்கு, தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்கள் மற்றும்

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இருந்து, ஆன் லைன் தேர்வில் வெற்றி பெற்ற அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

*புதுச்சேரி ஆள் சேர்ப்பு - 2 (6)*

இதற்கான அனுமதி அட்டை விரைவில் வழங்கப்படும் என்றும், விண்ணப்பதாரர்கள், உடல் தகுதித் தேர்வு, உடல் அளவீட்டுத் தேர்வு, மற்றும் மருத்துவ பரிசோதனைக்கு இப்போதே தயாராகலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆள் சேர்ப்பு நடைமுறைகள் முற்றிலும் தகுதி அடிப்படையில், வெளிப்படையான முறையில் நடைபெறும் என்பதால், விண்ணப்பதாரர்கள், இடைத் தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*நறுமணப் பயிர் (8)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் நறுமணப் பயிர் நாற்றங்கால் பயிர்களை பராமரிக்கும் விவசாயிகள், கேரள மாநிலம் கோழிக்கோட்டில் உள்ள, மத்திய அரசின் பாக்கு மற்றும் நறுமணப் பயிர் இயக்குநரகத்தின் அங்கீகாரம் பெற ஊக்குவிக்கப் படுவதாக, புதுச்சேரி அரசின் வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களை வேளாண்துறையின் தோட்டக்கலை பிரிவில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*காரைக்கால் போதை (5)*

காரைக்கால் பாலிடெக்னிக் கல்லூரியில், முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக இன்று நடைபெற்ற NSS அறிமுக நிகழ்ச்சியின் போது, போதைப் பொருட்களை தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. மாணவர்கள், போதை தவிர்ப்பு உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

*வானிலை (9)*

தமிழக கடலோர பகுதிகளில், கீழ்மட்ட வளிமண்டலத்தில், பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 24ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில் பலத்த காற்றுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 28ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

*பேட்மிண்டன் (9)*

சீன ஓபன் பேட்மிண்டன் சாம்பியன் பட்டத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் பி.வி. சிந்து, இன்று Round of 32 போட்டியில், சக வீராங்கனை உன்னதி ஹூடாவை தோற்கடித்து, 2ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளார். ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, இந்தோனேஷிய வீரரை தோற்கடித்து, Round of 16 சுற்றுக்கு முன்னேறினார். ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் எம்.ஆர். அர்ஜுன் – அம்ச கருணன் இணை, சீன இணையிடம் தோல்வி அடைந்தது. கலப்பு இரட்டையர் பிரிவில், தனிஷா கிராஸ்டோ – துருவ் கபிலா இணையும், ரோஹன் கபூர் – ரித்விகா ஷிவானி இணையும், சீன இணைகளிடம் தோல்வி அடைந்தன.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

ஆயுஷ் மருத்துவ வசதிகளை ராணுவ மருத்துவ மனைகளுக்கு நீட்டிப்பது குறித்து, மத்திய ஆயுஷ் துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

ஆழம் குறைந்த கடலோரப் பகுதிகளுக்கு ஏற்ற, இந்தியாவின் 2ஆவது மாஹே ரக ஏவுகணை எதிர்ப்புக் கப்பல், இன்று முறைப்படி, இந்திய கடற்படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

இந்திய ராணுவத்தில் அக்னிவீர் பணியிடங்களுக்கான ஆள் சேர்ப்பு முகாம், புதுச்சேரியில், வரும் ஆகஸ்ட் 1 முதல், நடைபெற உள்ளது.